Thiru N. GANAPATHI : Mr. Deputy Speaker, Sir, you cannot go on permitting what should not be discussed in the House. That is the rule. A ruling has been given. It cannot be discussed again.

Thiru S. R. BALASUBRAMANIAM: We are not criticising the ruling.

Thiru N. GANAPATHI : You are criticising the ruling.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, அது இரண்டு நாட்களாக இந்த அவையிலே பேசப்பட்டு, நேற்று அதனுடைய உச்சகட்டத்திற்குச் சென்று, விரும்பத் தகாத நிகழ்ச்சி ஏற்பட்டு, பிறகு சபாநாயகர் அவர்களாலே ஒரு தீர்ப்பு உரைக்கப்பட்டு, சபாநாயகருடைய கருத்தோடு, இந்த அவையிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு கருத்துரைத்து, அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை முடிந்து போயிற்று. மீண்டும் அந்தப் பிரச்சினை எழக்கூடாது. வேறு ஏதாவது அந்தப் பிரச்சினைக்கு உட்படாத ஒரு செய்தியை கேட்க வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், 'அன்-அட்டாச்ட்' மெம்பர் என்பதிலே ஆரம்பித்து தன்னுடைய விவாதத்தைத் துவக்குகிறார். அவர் 'அன்-அட்டாச்ட்' மெம்பரா, 'ஏ' யா, 'பி' யா என்ற விவகாரங்கள் முடிந்து விட்டன. மீண்டும் அதை இந்த அவையிலே கிளப்புவது இந்த அவையினுடைய மரபுக்கு உகந்தது அல்ல. எனவே தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு முன்னாலே நான் ஒன்றைச் சொல்கிறேன். திரு. குமரி அனந்தன் அவர்களைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதவி என்பதால் மட்டுமல்ல, இந்த மன்றத்தினுடைய மூத்த உறுப்பினராகவும் இருக்கக் கூடியவர். அவருடைய உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க இந்த மன்றம் கடமைப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அது குறித்து விளக்கம் கேட்பதோ, அந்தத் தீர்ப்பிற்கு உள்ளே செல்வதோ, அனுமதிக்க முடியாத ஒன்று. வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், அல்லது நேற்று நடந்து முடிந்த சம்பவத்தினுடைய பின்விளைவுகள் ஏதாவது இந்த மன்றத்திற்கு அவசியம் தெரிவிக்கப்பட வேண்டுமென்று இருந்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய அவசியம் இருந்தால், நாம் அனுமதிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : நான் இங்கே சொல்ல வந்தது, நாம் எல்லோரும் ஒரு சுமுகமான நிலையிலே இருந்து, இந்த அவையை நடத்துவதற்கு எங்களாலான ஒத்துழைப்பை எப்போதும் போல் தரவேண்டுமென்று சொல்கிற உயரிய நோக்கத்தோடும், சீரிய எண்ணத்தோடும்தான் நான் சொல்கிறேனே தவிர, யாரையும் குறை சொல்கின்ற நோக்கத்தோடு அல்ல.

1991 சனவரி 24] [திரு. குமரி அனந்தன்]

நான் பாராளுமன்றத்தைத் தொட்டதற்கே காரணம், இங்கு நமது சபாநாயகர் அவர்கள் சொன்னது, ஏற்கனவே யாரும் சொல்லாத ஒன்று அல்ல. இங்கே அண்ணா தி.மு.க. 2— என்று சொன்னதைப் போலே இதுவரை யாரும் சொல்லாத ஒன்றை இவர் சொல்லிவிடவில்லை. பாராளுமன்றத்திலேகூட அண்ணா தி.மு.க. 2—என்று அழைக்கப்பட்டது உண்டு ஆனால் ஒன்று என்று அழைக்கப்பட்டு, இரண்டு என்று அன்று அழைக்கப்பட்டது அங்கே 'வர்ட்டிகல் ஸ்பிளிட்'—செங்குத்தான ஒரு பிளவு, இந்தப் பெயர்கள் அங்கே வைக்கப்பட்டன. எனவே வைக்காத பெயரை வைத்து விட்டார்கள் என்றெல்லாம் நான் குறை சொல்லப்போவது இல்லை; வைத்தது வைத்தது தான். ஆனால் இங்கே நீங்கள் சொன்னதைப் போல் நேற்று நடந்த சம்பவத்தினுடைய பின் விளைவு என்று சொல்வதற்குரிய காரணம் என்னவென்று சொன்னால், இந்த இடத்திலேதான், நீங்கள் 'இரண்டு' என்று அழைத்தால் நாங்கள் பாதிக்கப்படுகிறோமே என்று அவர்கள் ஆரம்பித்தார்கள். அப்போது ஆரம்பித்ததினுடைய விளைவு என்னவென்பதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்போது இங்கே இரண்டு பேர் இருக்கிறார்கள்.

நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் சபாநாயகர் (குறுக்கீடு) அவர்கள் அவ்வளவு தூரத்திற்கு அதிகாரம் செலுத்திய காரணத்தால் அதிலிருந்து அவரை நான் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை (சிரிப்பு) Aroma is still there. அவர்கள் இப்போது ஜானகி இராமச்சந்திரன்—(ஜா) அணி என்று அழைக்கப்படுகிறார்கள். எனவே இப்படி ஒரு உதாரணம் இங்கே இருக்கிறது.

எங்களிலே கூட இப்படி வந்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் கூட பிளவு வந்தது. காங்கிரஸ் (ஆர்) காங்கிரஸ் (ஓ) என்றெல்லாம் வந்தது. நான் இங்கே இப்படிச் சொல்வது நம்முடைய வருங்காலத்திற்கும் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பதற்காக நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்த அவையினுடைய தலைவரை மிகுந்த மரியாதையோடு நடத்தி வந்த காரணத்தினாலே, அதனாலே நமது மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் இப்படித்தான் அது இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டால் அந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்பதைத் தவிர வேறு வழி இருக்காது. ஆனால் இப்படியெல்லாம் உதாரணம் இருக்கிற காரணத்தினாலே அதை 'இரண்டு' என்றுதான் சொல்ல வேண்டுமா? தாங்கள் எங்கள் மனக் குறையைப் போக்குவதற்கான வேறு வகை இருக்குமானால், அந்தத் தீர்ப்பை நீங்கள் சொல்வீர்களேயானால் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கலாமே என்ற எண்ணத்தின் அடிப்படையில் மனக் குறையைப் போக்குவதற்கு இடம் இருந்தால் உருவாக்கலாமே என்பதற்காக வைக்கப்படுகிற ஒரு சப்மிஷன் இது. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

[திரு. குமரி அனந்தன்] [1991 சனவரி 24

10-30 மணி

இரண்டாவது. நமது துணை சபாநாயகர் அவர்களே சொல்லுகிறபோது நேற்று நடந்ததின் பின்விளைவுகள் என்று சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். சபாநாயகர் அவர்கள் மீது ஒரு துரும்பு விழுந்தால் கூட, அது எந்தச் சூழ்நிலையில் யாரால் எப்படி நடந்தது. என்றெல்லாம் கூட அல்ல, அது எங்கள் மீது ஒரு தூண் தாக்கியதைப் போலத்தான் நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் அது தனிப்பட்ட ஒரு நபர் என்று சொல்லுகிற தமிழ்க்குடிமகனுக்கு ஏற்படுவதாக நாங்கள் கருதவில்லை. அந்த ஆசனத்திற்குக் கொடுக்கின்ற ஒரு மரியாதையை நாங்கள் மறுத்து விடவில்லை. எனவே சூழ்நிலை எப்படி என்று பார்க்கின்ற நேரத்தில், நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சபாநாயகர் அவர்களுக்கு, நமது காவலர் அவர்கள்கூட எங்களையெல்லாம் சற்று கண்ணியத்தோடு நடத்த வேண்டும். அடிக்கிற அளவுக்கும், சட்டையைக் கிழிக்கிற அளவுக்கும் அவர்கள் செல்லக் கூடாது..... (குறுக்கீடுகள்).

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் உள்ளபடியே மிகவும் வருத்தப்படுகிறேன். நேற்றைய தினம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு நேரிலே கண்டதை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். என்னதான் தோழமைக் கூட்டு என்றாலும் கூட அதற்காக அவர்களுக்கு வக்காலத்து வாங்குவதைப் போல ஏதோ இங்கே இருக்கிற காவலர்கள் தாக்கினார்கள் என்பதுபோல இன்று புதியதாக ஒரு பிரச்சினையைச் சொல்லி பத்திரிகைகளுக்கு மீண்டும் ஒரு செய்தியைத் தந்து, இந்த அவையில் என்ன காரணத்தினாலோ, இவைகள் எல்லாம் நடைபெற்றன என்பதைப் போன்ற ஒரு சூழலை உருவாக்குவது நல்லதாக எனக்குப் படவில்லை. நான் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடம் இருந்து இப்படிப்பட்ட ஒரு அணுகு முறையை நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. அதற்காக வருந்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : இந்த மைக் சில நேரங்களிலே கொடுப்பது இல்லை. சிலருக்கு வருகிறது. சிலருக்கு வரமாட்டேன் என்கிறது. உங்களுக்கே வரவில்லை என்றால் எங்களுக்கும் வரவில்லை என்று சொல்வதை விட உங்களுக்கும் வந்து எங்களுக்கும் வரலாம் என்றால் மகிழ்ச்சிதான்.

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் இப்போது சொல்லுகிற நேரத்தில் ஏதோ நான் இட்டுக் கட்டிச் சொல்வதாகவோ என்னவோ அவர்கள் மனத்தில் குறையாக இருந்த காரணத்தினால் சொல்லி விட்டார்கள். நான் சொல்வது—இன்று காலையிலே வெளியே திரு. இராதா வந்து என்னைப் பார்த்தார்கள். அடிபட்டதைச் சொன்னார்கள். அதற்காகச் சொன்னேன்.